<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>
**<u>OS</u>**<u>05/2009</u>

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ம் நாள் Dw3 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 25.08.2025

Dw3(சுப்பிரமணியன்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை (1 ம் பிரதிவாதி தரப்பில்)</u>**

1 ம் பிரதிவாதி பூபதி மற்றும் அவரது சகோதரர்களுக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியுடன் உடன் பிறந்த சகோதரர்கள் 1 ம் பிரதிவாதியுடன் சேர்த்து 6 பேர் மற்றும் ஒரு சகோதரி. வாதி வழக்கில் டி.ஏ சுப்பிரமணியம் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்று எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்கிறார் என்று எனக்கு தெரியாது. வாசாஆ 1 கிரய ஒப்பந்தத்தை பற்றி எனக்கு தெரியாது. அந்த ஒப்பந்தத்தின் செல்லும் தன்மை குறித்தும் எனக்கு தெரியாது. வாசாஆ 2 கால நீட்டிப்பு பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. 2 ம் பிரதிவாதி ரவிசந்திரன் எனக்கு உறவினரோ, நண்பரோ இல்லை. நான் கிரயம் பெறுவதற்கு முன்பு 2 ஆண்டுகளாக எனக்கு தெரியும். 3 ம் பிரதிவாதியின் அக்கா மகன் நான். அவ 05/2009 வழக்கில் நான் மனு தாக்கல் செய்து தரப்பினராக சேரவில்லை. 1 ம் பிரதிவாதியின் குடும்பத்தாரிடையே நாளது தேதி வரை எழுத்துப் பூர்வமான பாகம் இல்லை என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியின் சகோதரிக்கு பிறப்பின் அடிப்படையில் சொத்தில் பாகம் உள்ளதை நான் மறுக்கவில்லை. 1 ம் பிரதிவாதிக்கு 2 பெண் மக்கள் உள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பெற்ற கிரய ஆவணத்தில் 1 ம் பிரதிவாதியோ அவரது பெண் மக்களோ தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றதாக சொல்லும் அசல் கிரய ஆவணத்தை நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தவில்லை என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றதாக சொல்லும்

சொத்தில் நான் கட்டிடம கட்டினேன் என்பதற்கு பெற்ற அனுமதி, வீட்டு வரி சான்று, குடிநீர்கட்டண ரசீது, மின் கட்டண ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியாது. நான் 1ம் பிரதிவாதியிடமிருந்து நேரடியாக கிரயம் பெறவில்லை என்றால் அவர்கள் ரவிசந்திரனுக்கு கிரயம் ஏற்படுத்தியதாகவும் அவர்களிடமிருந்து தான் கிரயம பெற்றதாகவும் சாட்சி கூறுகிறார். 2ம் பிரதிவாதி ரவிசந்திரன் பணம் கொடுத்து கிரயம் பெற்றாரா அல்லது பெயரளவில் கிரயம் பெற்றாரா என்று தெரியாது. எனக்கு சுவாதீனம் யார் கொடுத்தார்கள் என்றால் ரவிசந்திரனும் பூபதியும் கொடுத்தார்கள். ரவிசந்திரனிடம் சொத்தின் சுவாதீனத்தில் இருந்தார் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் 13.06.2001ல் ரவிசந்திரன் பெயரில் கிரயம் உள்ளது. ரவிசந்திரன் பெயரில் உள்ள கிரய பத்திரத்தை படித்துப பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். ரவிசந்திரன் பெயரில் உள்ள ஆவணம் தான் மூல ஆவணமா என்றால் பூபதி வகையறா ரவிசந்திரன் பெயருக்கு பவர் கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் தான் கிரயம் பெற்றதாகவும் சாட்சி கூறுகிறார். ரவிசந்திரனுக்கு கொடுத்த பொது அதிகார ஆவணத்தில் சுவாதீனம் கொடுக்கப்பட்டதாக வாசகம் இல்லை என்றால் சரியல்ல, உள்ளது. ரவிசந்திரன் பெயரில் உள்ள பொது அதிகார ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தரப்பில் வழக்கில் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை. ரவிசந்திரன் பெயரில் உள்ள பொது அதிகார ஆவணம் மற்றும் நான் கிரயம் பெற்றதாக சொல்லும் கிரய ஆவணம் முன்னிலைபடுத்தினால் அது போலியான ஆவணம் என தெரிந்து விடும் என்பதால் அவற்றை முன்னிலைபடுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்றதாக சொல்லும் சொத்திற்கு கிரயத்திற்கு முன்பு வில்லங்க சான்று பெற்றேன். வில்லங்க சான்றிதழில் சொத்தில் வில்லங்கங்கள் இல்லையா என்றால் இல்லை. 06.07.1998 ல் ஏற்பட்ட ஒரு பதிவு கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. பொதுவாக ஒரு சொத்தில் வில்லங்கம் இருந்தால் அந்த ஆவணத்தை பொறுத்து கிரயம் ஏற்படாது என்றால் நான் வில்லங்கம் போட்ட போது அதில் வில்லங்கம் இல்லை என்பதால் கிரயம்

பெற்றதாக கூறுகிறார். நான் கிரயத்திற்கு முன்பு சொத்தை வில்லங்கம் பார்த்த வில்லங்க சான்றை என்னால் முன்னிலைபடுத்த முடியுமா என்றால் அதை தேடிப் பார்க்க வேண்டும். கிரயத்திற்கு அரசு வழிகாட்டுதல் மதிப்பை பார்த்து அதன் அடிப்படையில் தான் கிரயம் பெற்றப்பட்டது. வாசாஆ 3 ல் சொல்லப்பட்டுள்ள மதிப்பானது அரசு வழிகாட்டுதல் அடிப்படையில் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அனுமதி பெற்று கட்டிடம் கட்டியதாக சொல்லும் வருடம் என்ன என்றால் 2003 ல் ஒரு சிறு பகுதியும், 2004,2006 மற்றும் 2007 ல் கட்டிடம் கட்டினேன். கட்டிடம் கட்டியதற்கு முன் தான் அனுமதி பெறப்பட்டது. 2011-2012 ம் ஆண்டு நான் அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். 2011-2012 ம் ஆண்டு கார் செட் கட்டினேன். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் வாதி பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரம், கால நீட்டிப்பு பத்திரம் போலியானது என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி எனது முதல் விசாரணையில் முன்பணம் எதுவும் கொடுக்கப்படவில்லை, பேசப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம், கால நீட்டிப்பு பத்திரம் செல்லாது என்று கூறியுள்ளேன் என்றால் ஆமாம். 1 ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்கள் எனது பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். ரவிசந்திரன், சீரங்கசாமி மற்றும் நான் நிதிநிறுவன கூட்டாளிகள் என்றால் சரியல்ல. எனது பெயரில் ஏற்பட்டதாக சொல்லும் கிரயம் சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட பொது அதிகார ஆவணம் கடனுக்காக ஏற்பட்ட ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொது அதிகாரம் எழுதும்போது நான் உடனில்லை. குடும்ப சூழ்நிலை காரணமாக தான் பொது அதிகாரம் கொடுக்கப்பட்டதாக தான் கேள்விபட்டதாக கூறுகிறார். ரவிசந்திரன் பணம் கொடுத்து பொது அதிகாரம் பெற்றதாக ரவிசந்திரன் சொன்னார். ரவிசந்திரன் எவ்வளவு ரொக்கம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. பத்திரத்தில் எவ்வளவு கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் அது ஞாபகமில்லை. தாவா சொத்து

தொடர்பாக வேறு வழக்குகள் உள்ளதா என்றால் பூபதியின் மனைவி ஒரு வழக்கும், பூபதியின் அண்ணன் மகன்கள் ஒரு வழக்கும், பூபதியின் தங்கை கோமதி ஒரு வழக்கும் தொடர்ந்திருந்தனர் அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. வாதி சுப்பிரமணியை கந்து வட்டி சுப்பிரமணி என அழைப்பார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி பெயரில் நில அபகறிப்பு புகாரும் மோசடி பேர்வழி என்றும் முதல் விசாரணை 15 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனது தகவல் பேரில் தான் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம்தான் வாசாஆ 1 மற்றும் 2 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு இந்த வழக்கில் எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடயதல்ல என்றால் எனக்கு தெரியாது. நான் கிரயம் பெற்றதாக சொல்லும் கிரயம்மோசடியானது அது நடைமுறைக்கு வராத ஆவணம் என்றால் சரியல்ல. நான் கட்டிடங்கள் கட்டியதாகவும் வரி செலுத்தி வருவதாகவும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நானும் வாதியும் சேர்ந்து 1 ம் பிரதிவாதியை ஏமாற்றுகிறோம் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரயமும் எனது கிரயமும் செல்லாது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (வாதி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.08.25 16:54:29 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS